## (ஏ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்.

பின்னிணைப்பு IIல் உள்ள 27 தொடக்கம் 31 வரை உள்ள அட்டவணைகள் இலங்கையின் சென்மதி நிலுவையினதும், வெளிநாட்டுச் சொத்துக்களினதும் தரவுகளைக் காட்டுகின்றன. சென்மதி நிலுவைத் தரவுகள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளிலிருந்து பெற்ற உண்மையான வெளிநாட்டுச் செலாவணி வரவுகளிலிருந்தும், மதிப்பிடப்பட்டுள்ளனவாம்.

### பிரதானமான போக்குகள்:

கடந்த வருடத்திெனுடு ஒப்பிடுகையில் இலங்கைச் சென்மதி நிலுவையின் 1964ம் ஆண்டின் போக்கு, கலப்படமான போக்குகள் பலவற்றைப் பிரதிபலித்தது. வணிகப் பொருட் கணக்கு நிலுவையானது ரூபா 320 இலட்சத்தால் சீர்குலைந்து ரூபா 1930 இலட்சமாக அமைந்தது. ஆயினும் முழுக் கட்புலனுகைக் கணக்கின் நிலுவையில் ரூபா 66 இலட்சம் குறை, ரூபா 453 இலட்சம் மிகையான மாற்றத்தினுலேற்பட்ட சீர்திருத்தம் முழு நடைமுறைக் கணக்கின் மீதான 1963ம் ஆண்டின் ரூபா 1676 இலட்சக் குறையை 1964ல் ரூபா 1476 இலட்சமாகக் குறைத்தது. 1963ம் ஆண்டில் ரூபா 800 இலட்சமாக இருந்து, 19 4ல் ரூபா 660 இலட்சங்களாக வீழ்ச்சியுற்ற நீண்ட கால மூலதனத்தினது நிகர வரவுகள் காரணமாக, ''அடிப்படை நிலுவை''யானது குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் 1964ல் காட்டவில்லை. இந்த

அட்டவணை II ஏ – 1

### இலங்கையின் சென்மதி நிலுவை (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை | கட்புலனாகாதவை (தேறிய) | நடைமுறைக் கணக்கு நிலுவை | தேறிய நீண்டகால மூலதனம் (ஆ) | அடிப்படை நிலுவை | தேறிய குறுகிய கால மூலதனம் (இ) | பிழைகளும் தவறுகளும் | வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் (– அடையாளம் வீழ்ச்சியைக் குறிக்கும்) | காலமுடிவிலுள்ள இருப்புச் சொத்துக்கள் | இருப்புச் சொத்துக்கள் (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகள் தவிர்த்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 | 1,669 | 1,764 | – 95 | – 100 | – 195 | –18 | –213 | – 1 | – | – 214 | 1,062 | 973 |
| 1958 | 1,624 | 1,713 | – 89 | – 64 | – 153 | + 8 | –145 | +32 | – 16 | – 129 | 933 | 838 |
| 1959 | 1,773 | 1,958 | – 185 | – 23 | – 208 | +32உ | –176 | – | + 1 | – 175உ | 734 | 655 |
| 1960 | 1,796 | 2,006 | – 210 | – 10 | – 220 | +22 | –198 | –24 | + 29 | – 193 | 541 | 458 |
| 1961 | 1,707 | 1,794 | – 87 | – 7 | – 94 | +11 | – 83 | +93(ஈ) | – 19 | – 9 | 532(ஈ) | 441 |
| 1962 | 1,763 | 1,906 | – 143 | + 3 | – 140 | +39 | –101 | +42(ஈ) | + 31 | – 28 | 504(ஈ) | 407 |
| 1963 | 1,708 | 1,869 | – 161 | – 7 | – 168 | +80 | – 88 | +42 | + 4 | – 42 | 462 | 359 |
| 1964 | 1,764 | 1,957 | – 193 | + 45 | – 148 | +66உ | – 82 | +40 | – 9 | – 51உ | 351 | 305 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

(அ) அந்நிய செலாவணி வரவுகளினதும் மீதான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தனியாரினதும், அரசாங்கத்தினதும் நீண்டகால மூலதனத்தின் தேறிய நடமாட்டங்களை உட்படுத்தும் வரவுத் தொகைகள் பின்வருமாறு: 1957ல் 230 இலட்சம் ரூபாக்கள், 1658ல் 230 இலட்சம் ரூபாக்கள், 1959ல் 420 இலட்சம் ரூபாக்கள், 1960ல் 270 இலட்சம் ரூபாக்கள், 1961ல் 240 இலட்சம் ரூபாக்கள், 1962ல் 460 இலட்சம் ரூபாக்கள், 1963ல் 820 இலட்சம் ரூபாக்கள் 1964ல் 790 இலட்சம் ரூபாக்கள். சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜெர்மன் இணையாட்சிக் குடியரசு, ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசு, சீனு, ஐக்கிய இராட்சியம் ஆகியனவற்றிடமிருந்து பெற்ற நீண்டகால வெளிநாட்டுக் கடன்கள் காரணமாக நீக்கப்பெற்ற தொகைகளையே, இத்தொகைகள் எடுத்துக் காட்டுகின்றன.

(இ) இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் உள்ள பொறுப்புக்களின் மாற்றங்களையும், பொதுசனச் சட்டம் 480 இன் பயனுக எழுந்த நிதிகள், வெளிநாட்டவர்க்கான வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள் நிதியிலிருந்து எடுக்கப்பட்டவைகள் ஆகியவற்றையும் கொண்டிருக்கின்றது. 1964ம் ஆண்டுத் தொகை, அரிசி இறக்குமதி காரணமாக பர்மாவுக்குச் சேரவேண்டிய தொகைகளையும் உள்ளடக்கும்.

(ஈ) 1961ம் ஆண்டு சித்திரை, 1962ம் ஆண்டு மாசி ஆகிய மாதங்கள் ஒவ்வொரு முறையும் எடுக்கப்பட்ட ரூபா 538 இலட்சங்களை உள்ளடக்கும்.

(உ) இருப்பிலுள்ள ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளிலிருந்து 1959 ஆண்டு 240 இலட்சம் ரூபாக்களும், 1964ம் ஆண்டு 600 இலட்சம் ரூபாக்களுமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட ஸ்டேர்லிங் கடன்களைத் தவிர்த்து.

''அடிப்படை நிலுவை''யானது நீண்ட கால மூலதன நிகர வரவுகளிற்கெதிராக நடைமுறைக் கணக்குக் குறையைத் தேற்றிப் பெறப்படுவதாம். அரசாங்க நீண்ட கால மூலதன நிகர வரவுகள், 1963ம் ஆண்டினது ரூபா 754 இலட்சங்களோடு ஒப்பிடுகையில், 1964ல் ரூபா 674 இலட்சங்களாக அமைந்தன. சென்மதி நிலுவைக் கணக்கின்படியான இலங்கையின் ''அடிப்படை நிலுவை''யானது 1963ம் ஆண்டினது குறையாகிய ரூபா 880 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1964ல் ரூபா 820 இலட்சம் குறையாக இருந்தது. இந்த ''அடிப்படைப் பணக்குறை''யினது நிதியீட்ட மூலங்களாக ரூபா 400 இலட்சம் கொண்ட குறுகிய கால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பும், ரூபா 510 இலட்சம் கொண்ட இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் (கிடைக்கப்பெற்ற ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளிலிருந்து அடைக்கப்பட்ட ரூபா 60 இலட்சம் கொண்டதோர் ஸ்டேர்லிங் கடனைத் தவிர்த்து) ஓர் வீழ்ச்சியும் அமைந்தன. 1964ல் வெளிநாட்டுத் சொத்துக்கள் அடிப்படைக் குறையின் 62 சத வீதத்திற்கு நிதி ஈட்டின. 1962லும், 1963லும் அவை முறையே, இக்குறையின் 28 சதவீதத்திற்கும் 48 சதவீதத்திற்கும் நிதியீட்டினவாம்.

## வணிகப் பொருட் கணக்கு:

வணிகப் பொருட் கணக்கின் மீதான இலங்கையின் நிலுவை (கொடுப்பனவுத் தரவுகளின்படி) ரூபா 320 இலட்சங்களால் மேலும் சீர்குலைந்து, 1964ல் ரூபா 1930 இலட்சங்களாக அமைவுற்றது. இதற்குரிய முக்கிய காரணம் 3·4 சதவீதம் கொண்ட வர்த்தக மாற்று வீதத்தின் ஓர் பாதகப் போக்கேயாகும். இப் போக்கு முதன்மையாக இறக்குமதி விலைகளில் காணப்பெற்ற 1·9 சதவீத விலை உயர்வினால் ஏற்பட்ட தொன்றாகும். ஏற்றுமதி விலைகள் சராசரியாக மாற்றமுறாதிருந்தன. இவ்விறக்குமதிப் பொருட்களின் விலையேற்றம் ''உணவும் பானமும்'', ''ஏனைய நுகர்வுப் பொருட்கள்'' ஆகிய பொருட் தொகுதிகளாலேயே செறிந்து காணப்பட்டது. சகல ஏற்றுமதிகளினதும் சராசரி விலையானது, கடந்த ஆண்டு நிலையிலிருந்து மாற்றமுறாதிருந்த போதிலும், ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 7·2 சதவீதம் கொண்டதோர் உயர்வின் காரணமாகவே பிரதானமாக இவ்வேற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம், ரூபா 560 இலட்சங்களால் அதிகரித்து ரூபா 17640 இலட்சங்களாக இவ்வருடத்தில் அமைந்தது. இவ்வாண்டில் குறிப்பாக முதன் மூன்று காலாண்டுப் பகுதிகளில் தேயிலை விளைவுற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும், ஆண்டிறுதியில் இலங்கையின் வடக்குக் கிழக்குக் கரையோரப்பகுதிகளிலே ஏற்பட்ட சூறாவளி காரணமாக உண்டான தேயிலைச் சரக்கினது நட்டமும், காரணமாக இவ்வாண்டில் தேயிலை ஏற்றுமதிகள் சென்ற ஆண்டில் நிலையையே அடையக்கூடியதாக இருந்தன. இவ்வாறில்லாவிடின், இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி வருவாயின் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறும் இத்தேயிலை ஏற்றுமதிகளின் ஏற்றுமதித் தொகையும், அதன் மூலம் 1964ம் ஆண்டின் சகல ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானமும், எவ்வளவோ கூடுதலாக உயர்ந்திருக்க முடியும். மேலும் இரப்பர் ஏற்றுமதிகளின் தொகையில் ஏற்பட்ட 21 சதவீதம் கொண்ட ஓர் அதிகரிப்பை அதன் சராசரி விலையில் ஏற்பட்ட 7 சத வீழ்ச்சி தேற்றியது. தெங்குப் பொருட்களைச் சார்ந்த மட்டில் அவற்றின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 33 சதவீத உயர்விற்கு, அவற்றின் சராசரி விலையிலும் ஏற்பட்ட 3 சதவீத உயர்வு, மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தைக் கூட்டும் வகையில் உதவிற்று.

முன்னர் கூறியபடி 1964ம் ஆண்டின் இலங்கையின் பாதகமான சென்மதி நிலுவை நிலைக்கு முக்கிய காரணியாக அமைந்தது, இலங்கையினது வர்த்தகமாற்று வீதத்தின் பாதகமான போக்கே. 1963ன் நிலைகளிலே மாற்றமுறாது நின்ற ஏற்றுமதிகளின் சராசரி விலைகள், 1960ம் ஆண்டின் நிலையிலும் 10 சதவீதத்தால் குறைந்திருக்கின்றன. மறுபுறத்தில் சராசரி இறக்குமதி விலைகள் இரண்டு சதவீதத்தால் இவ்வாண்டில் உயர்ந்து, 1957ம் ஆண்டிலிருந்து பெறப்படும் காலப்பகுதிக்கான உச்ச நிலையாக விளங்கிற்று. 1964ம் ஆண்டிலே மொத்த இறக்குமதிகளின் அரைப்பங்கிற்கு மேலாக வகைகூறும் இறக்குமதிப் பொருட் தொகுதியான ''உணவும் பானமும்'' என்ற மொத்த இறக்குமதிச் செலவின் முக்கிய பகுதியிலேயே இவ்விலை ஏற்றம் செறிந்துள்ளது. ''உணவும் பானத்தினதும்'' சராசரி விலைகள், 1963ம் ஆண்டின் நிலையிலிருந்து 8 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு, பிரதானமாக சீனியினதும் குறைந்த அளவில் அரிசியினதும், கோதுமை மாவினதும் கொ. கா. க. விலைகளிலேற்பட்ட. உயர்வையே பிரதானமாகப் பிரதிபலித்தது. எனினும், இதை ஈடு செய்யும் வகையில் ஆடை வகைகள் (3 சதவீதம்) நடுத்தரமான பொருட்கள்

(5 சதவீதம்) முதலீட்டப் பொருட்கள் (2 சதவீதம்) ஆகிய வற்றின் சராசரி விலைகளிலே ஏற்பட்ட வீழ்ச்சிகள் ஓரளவில் அமைந்தன. ஆயினும் விதிக்கப் பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாக நுகர்வுப் பொருட்களின் மீதான மொத்த இறக்குமதிச் செலவு அண்மை வருடங்களில் பெருமளவிற்குக் குறைவுற்றதனுல், இப்பொருட்களின் சராசரி விலைகளின் வீழ்ச்சியானது, சென்மதி நிலுவைக்கு அளிக்கக்கூடிய சாதகமான நிகர பலன் களும் குறிப்பிடத்தக்களவில் ஏற்பட முடியாது. உணவு, பானம், ஆடை வகை கள் தவிர்ந்த ஏனைய நுகர்வுப் பொருட்களினது இறக்குமதி விலைகளும், 1964ல் 2·4 சதவீதத்தால் உயர்வுற்றன. இது, 1964ல் இலங்கையின் சென்மதி நிலுவைக் கஷ் டங்களுக்கும், இறக்குமதிச் செலவு உயர்விற்கும் மற்றுமொறு காரணியாயிற்று, 1964ல் இலங்கையின் அனுபவம், தனது வர்த்தக நிலுவையின் நிலையை நிர்ணயிப்ப திெல் வர்த்தக மாற்று வீதமானது தொடர்ந்தும் ஒரு முக்கிய பங்கெடுத்துக் கொள் கின்றதென்பதை, எடுத்துக் காட்டியது. அதுமட்டுமன்றி, இவ் வர்த்தகமாற்று விகி தம் கூடிய உள்நாட்டு உற்பத்தியினுலும், இறக்குமதித் தொகைக் கட்டுப்பாடுகளி ஞலும், முறையே, ஏற்றுமதிகளை அதிகரிக்கும் இறக்குமதிகளைக் குறைக்கும் நோக் கத்துடன், சென்மதி நிலுவையில் சமபாட்டை ஏற்படுத்த இலங்கை மேற்கொண்ட அதிகரித்த முயற்சியை முறியடிக்கும் ஆற்றல் பெற்றதொன்று என்பதனையும் இவ் வாண்டினது அனுபவம் வலியுறுத்தியுள்ளது.

## கட்புலஞகாக் கணக்கு:

அட்டவணை II ஏ—2

### நடைமுறைக் கட்புலஞகாக் கணக்கு 1963ம், 1964ம்.

| | 1963 | | | 1964 (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| சேவைகள் .. | **210·5** | **230·3** | −19·8 | **181·2** | **175·5** | +5·7 |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (தேறிய) .. | – | 1·9 | − 1·9 | – | 1·6 | − 1·6 |
| ஏற்றியிறக்கல் .. | 108·3 | 33·1 | +75·2 | 102·9 | 30·3 | +72·6 |
| பிரயாணம் .. | 5·9 | 22·0 | −16·1 | 5·6 | 13·5 | − 7·9 |
| முதலீட்டு வருமானம் .. | 15·7 | 68·2 | −52·5 | 12·2 | 46·3 | −34·1 |
| அரசாங்கச் செலவுகள் .. | 25·8 | 25·4 | + 0·4 | 23·2 | 19·9 | + 3·3 |
| ஏனைய சேவைகள் .. | 54·8 | 79·7 | −24·9 | 37·3 | 63·9 | −26·6 |
| மாற்றக் கொடுப்பனவுகள் .. | **49·5** | **36·3** | **+13·2** | **82·0** | **42·4** | **+39·6** |
| தனியார் கொடுப்பனவுகள் | 5·9 | 36·3 | −30·4 | 5·6 | 42·4 | −36·8 |
| அரசாங்கக் ,, | 43·6 | – | +43·6 | 7(·4 | – | +76·4 |
| மொத்தம் .. | **260·0** | **266·6** | **− 6·6** | **263·2** | **217·9** | **+45·3** |

(அ) தற்காலிகமானவை.

கட்புலஞகாக் கணக்கின் மீதான இலங்கையின் நிலுவை, 1964ல் குறிப்பிடத் தக்க சீர்திருத்தத்தைக் காட்டியுள்ளது. 1962லும், 1963லும் முறையே கட்புலஞகாக் கணக்கில் ரூபா 30 இலட்சம் கொண்ட மிகையும், ரூபா 66 இலட்சம் கொண்ட குறையும் ஏற்பட்டிருக்கையில், 1964ல் இக்கணக்கில் ரூபா 543 இலட்சம் கொண்ட மிகை பெறப்பட்டுள்ளது. 1964ல் ஏற்பட்ட இக் கட்புலஞகாக் கணக்கு நிலுவையின் திருத்தமானது, முதலீட்ட வருமானத்தின் தேறிய குறை ரூபா 341 இலட்சத்தி லிருந்து ரூபா 184 இலட்சங்களாக வீழ்ச்சியுற்றமையினுலும், குடிபெயர்வோர் மாற் றங்கள் மீதான மிகையின் அதிகரிப்பினுலுமே பிரதானமாகப் பெறப்பட்டதாம். 1964 ஆவணியில் பங்கிலாபம், லாபம், மூலதனம் முதலியவற்றின் நாட்டுக்கு வெளி யேயான மாற்றங்களின் மேல் விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையினுல், முதலீட் டக் கணக்கு, பெரிதும் பயனடைந்துள்ளது. இப்பலன்களை, வீழ்ச்சியடைந்து வரும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மீதான வருமான வீழ்ச்சி, ஓரளவில் தேற்றியுள்ளது. வெளிநாட்டு அரசகரும நன்கொடைகள், ரூபா 328 இலட்சங்க ளால் அதிகரித்து, 1964ல் ரூபா 764 இலட்சங்களாக அமைந்தன. இது, சீனுவிட மிருந்தும் (ரூபா 328 இலட்சங்கள்) கனடாவிடமிருந்தும் (ரூபா 140 இலட்சம்) அமெரிக்கக் குடியரசிடமிருந்தும் (ரூபா 250 இலட்சம்) பெற்ற உதவியையே பிர

தானமாகப் பிரதிபலிக்கின்றது. இந்நன்கொடைகள், பொருள்வடிவிலேயே அளிக்கப்பட்டனவாம். இலங்கைத் துறைமுகங்களிற் தங்கியதும், கரிக்கல வசதிகள் பெற்றதுமான கப்பல்கள் எண்ணிக்கை வீழ்ச்சியுற்றமையால், துறைமுகங்களின் வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 26 இலட்சம் கொண்டதோர் வீழ்ச்சியும், ரூபா 61 இலட்சத்தினுல் அதிகரித்து ரூபா 424 இலட்சமாக அமைந்த குடிபெயர்வோர் மாற்றங்களும், கட்புலனுகாக் கணக்கில் முன்னர் கூறிய காரணிகள் ஏற்படுத்திய சீர்திருத்த விளைவுகளை மிதப்படுத்தின.

## நிதியீட்டக் கணக்கு:

அட்டவணை II எ—3

### இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்—வெளிநின்றவை (1) (மொத்தம்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 | 1964 | மாற்றம் |
|---|---|---|---|
| 1. கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் "இலங்கை கொடுக்க வேண்டியவை" .. .. | 49·6 | 69·3 | + 19·7 |
| 2. ச. நா. நிதியிலிருந்து பெறப்பட்டவை .. .. | 107·6 | 107·6 | — |
| 3. ஸ்டேர்லிங் கடன்கள் .. .. | 167·9 | 107·9 | — 60·0 |
| 4. ஏனைய பெறப்பட்டனவும் வெளிநின்றனவுமான அந்நிய கடன்கள் (2) .. .. | 263·2 | 330·6 | + 67·4 |
| 5. காலந் தாழ்த்திய கொடுப்பனவுகள் (அரிசி) .. | — | 37·3 | + 37·3 |
| மொத்தம் .. .. | 588·3 | 652·7 | + 64·4 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

1. வெளிநாட்டு செலாவணியில் கொடுபடவேண்டிய பொறுப்புக்கள், பொதுசனச் சட்டம் 480ன் பயனுகை எழுந்த நிதிகளின் நிலுவைகள், வர்த்தக வங்கிகளிலிருக்கும் வதிவற்ற கணக்குகள் நிலுவைகள் ஆகியனவற்றை உள்ளடக்குவனவல்ல. இத்தகைய நிலுவைகள் 1963ம் ஆண்டில் ரூபா 31 இலட்சத்தால் ரூபா 827 இலட்சத்திலிருந்து ரூபா 868 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளன.
2. சர்வதேச புணருத்தாரண அபிவிருத்தி வங்கி ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசு, சீனு, மேற்கு ஜெர்மனி, கனடா ஆகியனவற்றிடமிருந்து பெற்ற கடன்களில் எடுத்த தொகைகளை உள்ளடக்கும்.

முன்னர் கூறியபடி நடைமுறைக் கணக்கின் மீதான குறை, 1963ம் ஆண்டின் ரூபா 1680 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1964ல் ரூபா 1480 இலட்சமாக இருந்தது. இக்குறையின் ஒருபகுதிக்கு, ரூபா 660 இலட்சம் கொண்ட நீண்டகால மூலதன நிகரவரவுகள், நிதியீட்டம் செய்தன. இதன்விளைவாக ஏற்பட்ட ரூபா 820 இலட்சம் கொண்ட அடிப்படைக் குறைக்கு நிதியீட்ட குறுகிய காலப் பொறுப்புக்களின் அதிகரிப்பும், வெளிநாட்டுச் சொத்துக்களின் உபயோகமும் பயன்பட்டன. 1964ல் பெறப்பெற்ற மொத்த நீண்டகால மூலதனமாகிய ரூபா 785 இலட்சத்தோடு 1963ல் பெறப்பெற்ற ரூபா 817 இலட்சம் ஒப்பிடற்குரியது. நீண்ட காலக் கடன்கள் அனைத்தும் ஒன்றில், குறிப்பிட்ட திட்ட முயற்சிகளைச் சார்ந்தோ, அன்றிக் கடன் அளிக்கும் நாடுகளிடமிருந்து இறக்குமதிகளைப் பெறவேண்டிய நிபந்தனையின் பேரிலேயோ அளிக்கப்பட்டனவாம்.

1964ல் பயன்படுத்தப்பட்ட நீண்டகாலக்கடன்கள், சர்வதேச புனருத்தாரண வங்கி (ரூபா 148 இலட்சம்) ரஷ்யா (ரூபா 330 இலட்சம்) செஞ்சீனு (ரூபா 142 இலட்சம்) மேற்கு ஜெர்மனி (ரூபா 73 இலட்சம்) பிரிட்டன் (ரூபா 62 இலட்சம்) அமெரிக்கா (ரூபா 11 இலட்சம்) கனடா (ரூபா 14 இலட்சம்) யூகோசிலேவியா (ரூபா 5 இலட்சம்) முதலியவற்றிடமிருந்து பெறப்பட்டன. சர்வதேச புணருத்தாரண வங்கியால் 1964ல் அளிக்கப்பட்ட ரூபா 148 இலட்சம் கொண்ட கடனுனது நோர்ட்டன் பால நீர்வலு மின்சாரத்திட்டதிற்கெனவும், இரண்டாவது கிராண்ட்பாஸ் எரிமின்சார இயந்திரத்திற்கெனவும், ஒழுங்கு செய்யப்பட்ட மொத்த ஒதுக்கலான ரூபா 1850 இலட்சத்தின் ஒருபங்காகும். ரஸ்யா வழங்கிய கடன் பலவிதப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களிற்கென வழங்கப்பட்டது. இவையுட் சில ஆற்றங்கரை நில அபிவிருத்தி, பயிர்ச்செய்கை நிமித்தம் காடு வெட்டல், அமைக்கப்படவிருக்கும் உரத் தொழிற்சாலை, போன்றனவாம். செஞ்சீனுவின் கடன், மேலதிகமான அரிசி இறக்குமதிகளுக்கு நிதியீட்டம் செய்யும் நிமித்தம், அளிக்கப்பெற்றது. மேற்கு ஜெர்மனியும், பிரிட்டனும் அளித்த கடன்கள், முறையே, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கும், தந்தி வசதிகளின் விரிவுத் திட்டத்திற்குமாக பயன்படுத்தப்பட்டன.

தனியார் நீண்டகால மூலதனத்தின் மொத்த உள்வரவைப் பொறுத்தமட்டில், 1963ற்குரிய இதன் தொகையான ரூபா 87 இலட்சத்தோடு ஒப்பிடுகையில், அது 1964ல் ரூபா 43 இலட்சங்களாக அமைந்தது. இவற்றின் மொத்த வெளியேற்றம் 1963ன் தொகையான ரூபா 35 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1964ல் ரூபா 59 இலட்சமாக இருந்தது. எனவே தனியார் நீண்டகால மூலதனத்தின் மீதான நிகர நிலுவையானது, 1964ல் ரூபா 16 இலட்சம் கொண்ட குறையைக் காட்டிற்று. இக் குறை, 1963ல் பெறப்பட்ட மிகையாகிய ரூபா 49 இலட்சத்துடன் ஒப்பிடற்பாலது. பிரதானமாகத் தனியார் துறையின் அங்கீகாரம் பெற்ற கைத்தொழில்களுக் கெனவே, 1963ல் ஏற்பட்ட தனியார் மூலதன உட்பாய்வு, தொடர்ந்தது. 1964ல் ஏற்பட்ட தனிப்பட்டோர் மூலதன வெளியேற்றமானது, பலதரப்பட்ட திட்ட முயற்சிகளின் உருவாக்கத்திற்கென இலங்கையிலுள்ள வெளிநாட்டுக் கிளைக் கூட்டு நிலையங்கள், தமது தலைமை அலுவலகங்களிடமிருந்து பெற்ற தொழிற்படு மூல தனத்தை திருப்பியளித்ததையே, காட்டுகின்றது.

1964ல் இலங்கையினது அடிப்படைக் குறைக்கு வேண்டிய நிதியீட்டம், ரூபா 400 இலட்சத்தால் வெளிநாட்டு குறுகிய காலப் பொறுப்புக்களை அதிகரித்தும், இலங்கையினது வெளிநாட்டுச் சொத்துக்களை ரூபா 510 இலட்சம் கொண்ட (அடைக்கப்பட்ட ஸ்டேர்லிங் கடனாகிய ரூபா 60 இலட்சத்தைவிட) தொகையால் வீழ்த்தியும் செய்யப்பட்டது. குறுகிய காலப் பொறுப்புக்களிலே ஏற்பட்ட அதி கரிப்பானது ரூபா 400 இலட்சத்திற்கு, முக்கியமாக சீனவுடனும், ரஷ்யாவுடனும் செய்து கொண்ட இருபக்கச் சென்மதி ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை அடைந்த கடன்பாடுகளின் அதிகரிப்பாகிய, முறையே, ரூபா 151 இலட்சமும், ரூபா 76 இலட்ச மும், பர்மாவுடன் செய்து கொண்ட காலம் தாழ்த்திக் கொடுப்பனவு செய்யும் ஒழுங்காகிய ரூபா 373 இலட்சமும், வகை கூறின. மறுபுறத்தில் குறுகிய கால தனிப்பட்டோர் மூலதனப் பொறுப்புக்கள், ரூபா 130 இலட்சத்தால் வீழ்ச்சியுற் றன. இப்பொறுப்புக்கள் பெருமளவில் இலங்கையிலிருக்கும் தொழில் நிறுவனங் கள் வெளிநாட்டு தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைகளையே குறிப்பன. இவ்வித வீழ்ச்சி, கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டதன் விளைவாக, இத் தொழில் நிறுவனங்களின் இறக்குமதிகளில் 1964ல் மேலும் ஏற்பட்ட குறைவு காரணமாகவே எழ முடியுமாயிற்று.

அட்டவணை II ஏ—4

## நாணயப் பிரதேசங்களின்படி 1963, 1964க்கான நடைமுறைக் கணக்கு நிலைமை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 | | | 1964(தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 1. டொலர் பிரதேசம் .. .. | **275·1** | **106·1** | **+169·0** | **282·8** | **120·2** | **+162·6** |
| 2. ஸ்டேர்லிங் பிரதேசம் .. .. | **1,022·9** | **1,162·7** | **—139·8** | **970·4** | **1,089·9** | **—119·5** |
| (i) பிரித்தானியா .. .. | 628·8 | 602·5 | + 26·3 | 573·7 | 526·3 | + 47·4 |
| (ii) இந்தியா .. .. | 57·4 | 213·7 | —156·3 | 70·1 | 228·4 | —158·3 |
| (iii) ஏனையவை .. .. | 336·7 | 346·5 | — 9·8 | 326·6 | 335·2 | — 8·6 |
| 3. ஸ்டேர்லிங், டொலர் பிரதேசங்கள் அல்லாத ஏனைய பிரதேசங்கள் .. | **668·6** | **864·6** | **—196·0** | **773·8** | **964·5** | **—190·7** |
| (i) ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுத்தாபனத்து நாடுகள் . | 186·2 | 232·8 | — 46·6 | 195·1 | 269·0 | — 73·9 |
| (ii) சீன .. .. | 114·1 | 146·1 | — 32·0 | 155·3 | 182·4 | — 27·1 |
| (iii) சோவியத் குழு .. .. | 109·3 | 159·3 | — 50·0 | 165·9 | 207·0 | — 41·1 |
| (iv) ஏனையவை .. .. | 259·0 | 326·4 | — 67·4 | 257·5 | 306·1 | — 48·6 |
| மொத்தம் .. .. | **1,966·6** | **,2133·4** | **—166·8** | **2,027·0** | **2,174·6** | **—147·6** |

*ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்சு, ஜெர்மன் இணையாட்சிக் குடியரசு, கிறீஸ், இத்தாலி, நெதலன்ஸ், நோர்வே, போத்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடின், சுவித்செலாந்து ஆகிய நாடுகளை உள்ள டக்கும்.

இலங்கையின் நாணயப் பிரதேசங்களின் படியான நடைமுறைக் கணக்கின் சென்மதி நிலுவை நிலைமை, முன்னைய ஆண்டின் அமைப்பையே தொடர்ந்தும் இவ்வாண்டில் கொண்டிருந்தது. எனினும் டொலர்ப் பிரதேசத்துடன் ஏற்படும் வழமையான மிகை ரூபா 64 இலட்சத்தால் வீழ்ந்தும், ஸ்டேர்லிங் பிரதேசத்துடன் 1963ல் இருந்த குறையாகிய ரூபா 1398 இலட்சம், ரூபா 203 இலட்சத்தால் வீழ்ந்து, 1964ல் ரூபா 1195 இலட்சமாகவும் விளங்கியது. ஸ்டேர்லிங் பிரதேசத்தினுள் பிரித்தானியாவுடன் 1963ல் இருந்த மிகையாகிய ரூபா 263 இலட்சம், 1964ல் ரூபா 474 இலட்சமாக உயர்ந்தது. வணிக நடைமுறைக் கட்டுலனுகாக் கொடுக்கல் வாங்கல்களிலெழுந்த பிரித்தானியாவிற்குச் செய்யப்பட்ட குறைந்தளவு கொடுப்பனவுகளே, இதற்கு முக்கிய காரணமாகும். 1963ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தியாவுடனும் ஏனைய ஸ்டேர்லிங் பிரதேசங்களுடனும் ஏற்பட்டிருந்த குறை 1964ல் மாற்றமெதுவுமின்றி இருந்ததாகக் கூறலாம். ஸ்டேர்லிங் டொலர் பிரதேசங்கள் அல்லாத ஏனைய பிரதேசங்களுடன் ஏற்பட்ட குறை, 1963ல் இருந்த ரூபா 1960 இலட்சத்திலிருந்து, ரூபா 84 இலட்சத்தால் சிறிதளவாக குறைந்து, 1964ல் ரூபா 1876 இலட்சமாக நின்றது. ஐரோப்பாக் கண்ட பொருளாதாரக் கூட்டுறவுத்தாபன நாடுகளுடன் ஏற்பட்டிருந்த குறை, ரூபா 273 இலட்சத்தால் அதிகரித்தது. சோவியத் குழுவுடனும் செஞ்சீனவுடனுமான மொத்தக் குறை, ரூபா 138 இலட்ச வீழ்ச்சியைப் பதிவு செய்து, 1964ல் ரூபா 682 இலட்சங்களாக இருக்கப்பெற்றது. இது, கொடுப்பனவுகள் ரூபா 840 இலட்சங்களால் அதிகரித்திருப்பினும், வரவுகளும் அதே சமயத்தில் ரூபா 978 இலட்சத்தால் 1964ல் அதிகரித்தமையினல் ஏற்பட்ட தொன்றுகும்.

## வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள்:

1963ல் ஏற்பட்ட வீழ்ச்சியான ரூபா 479 இலட்சத்தோடு ஒப்பிடுகையில், இலங்கையின் ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகள் தவிர்ந்த ஏனைய ஒதுக்கு நிதிகள், 1964ல் ரூபா 541 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதிகளின் மீது பெறப்பட்ட குறைந்த வருவாயினதும், இறக்குமதிகளின்மீது, குறிப்பாக, உணவு இறக்குமதிமீது செய்யப்பட்ட கூடியளவு கொடுப்பனவுகளினதும் ஒருமித்த விளைவாக, இவ்வாண்டின் முதல் அரையாண்டில் வெளிநாட்டுச் சொத்துக்கள், ரூபா 686 இலட்சம் கொண்ட பெருமளவு தொகையால் வீழ்ச்சி அடைந்தன. இதற்கு முரணுக கடை அரை ஆண்டிலே ஏற்பட்ட சென்மதி நிலுவை நிலைமைத் திருத்தத்தைப் பிரதிபலிக்கும் விதமாக வெளிநாட்டு ஒதுக்குநிதிகள் இக்காலப் பகுதியில் ரூபா 145 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. 1964ம் ஆண்டு முடிவில் இருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் தொகையான ரூபா 3047 இலட்சத்தில் (ஸ்டேர்ர்லிங் கடன் ஆழ்நிதிகளைத் தவிர்த்து) மகா வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி, ரூபா 135 இலட்சத்திற்கு வகை கூறியது. இவ்வாண்டு முடிவிலே சர்வதேச ஒதுக்கு நிதியின் திரவத்தன்மை வாய்ந்த நிதிகள் ரூபா 497 இலட்சமாக இருந்தன. இவை பிரதானமாக வெளிநாட்டுப் பிணைகளாக இருந்தன. 1964ம் ஆண்டு இறுதியில் பெறப்பட்ட வர்த்தக வங்கிகளது வெளிநாட்டு நிலுவைகள், ரூபா 1073 இலட்சங்களாக இவ்வங்கிகளது தொழிற்பாட்டு நிலுவைகளைக் கொண்டதோர் தொகையாக விளங்கின. இத் தொழிற்பாட்டு நிலுவைத் தொகையுள் ரூபா 537 இலட்சங்கள், வெளிநாட்டு நிலுவைகளாகவும், ஏற்றுமதி உண்டியல்கள் ரூபா 536 இலடசங்களாகவும் இருந்தன.